# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 42**

# அறிவிப்புகள்
# 2023 - 2024

**திரு. இ. பெரியசாமி**

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

## ஊரக வளர்ச்சி மற்றும்
## ஊராட்சித் துறை

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் **15** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## திரு. இ. பெரியசாமி
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

**1. விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அவர்கள் வாழும் குடியிருப்புகளில் தேவையென கண்டறியப்பட்டுள்ள முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், கால்வாய்கள், தெரு விளக்குகள், குடிநீர் வசதிகள் போன்றவை பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து 1500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

இன்றும் பல ஊராட்சிகளில் விளிம்பு நிலை மக்கள் வாழும் குடியிருப்புகள் பிற குடியிருப்புகளுடன் ஒப்பிடுகையில் குறைவான அடிப்படை வசதிகளை கொண்டதாக உள்ளது. ஊரக வளர்ச்சித் துறை மூலமாக செயல்படுத்தப்படும் ஒன்றிய மற்றும் மாநில அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து இம்மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கு தேவையான சாலைகள், கால்வாய்கள், தெரு விளக்குகள் குடிநீர் வசதிகள் போன்றவை 1500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**2. மக்கள் பங்கேற்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து (P I P ) முன்னுரிமை அடிப்படையில் ஒரு இலட்சம் கிராமப்புர ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனி நபர் மற்றும் சமுதாய சொத்துக்கள் உருவாக்கப்படும்.**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக மக்கள் பங்கேற்பு முறையில் இலக்கு மக்கள் கண்டறியப் பட்டுள்ளனர். இம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருமானத்தை உயர்த்த நிலைத்த சொத்துகள் தேவைப்படுகின்றன. ஒரு இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு, நிலைத்த வருமானத்தை வழங்கக்கூடிய சொத்துக்களை உருவாக்கும் பணிகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை ஒருங்கிணைத்து 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 3. ஊரகப் பகுதிகளில் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்

இந்த ஆண்டு ஜல் ஜீவன் இயக்கம், ஒன்றிய நிதிக்குழு மானிய நிதி மற்றும் மாநில நிதிக்குழு மானிய நிதி ஆகியவற்றை ஒருங்கிணைத்து 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்.

## 4. தமிழ்நாடு அரசின் "பசுமை தமிழ்நாடு இயக்கத்தை" முன்னெடுத்து செல்லும் வகையில் 70 இலட்சம் மரக்கன்றுகள் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும்

புவி வெப்பமடைதலை தடுத்திடவும், ஊரகப் பகுதிகளின் பசுமையை அதிகரிக்கவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 70 இலட்சம் மரக்கன்றுகள் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அரசு நிலங்கள், நிறுவனங்கள் மற்றும் சாலையோரங்களில் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்படும்.

**5. ஊரகப் பகுதிகளில் இரத்தசோகையை குறைக்கும் பொருட்டு 21 இலட்சம் முருங்கை கன்றுகள் 137 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களால் வளர்க்கப்பட்டு, பத்து இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்**

முருங்கை இலை மற்றும் காய்களில் அதிக இரும்புச்சத்துள்ளதால் இதனை பெண்கள் மற்றும் வளரிளம் பெண்கள் உட்கொள்வதால் இரத்தச்சோகை தடுக்கப்படும். அதற்காகவும் ஆரோக்கியமான ஊராட்சிகளை (Healthy Panchayats) உருவாக்கும் நோக்கிலும் 21 இலட்சம் முருங்கை நாற்றுகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்டு, பத்து இலட்சத்து 50 ஆயிரம் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

**6. ஊரகப் பகுதிகளில் பணிபுரியும் 66,130 தூய்மைக் காவலர்களின் மாதாந்திர மதிப்பூதியம் 3600 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

அனைத்து கிராம ஊராட்சிகளையும் தூய்மையாக வைத்திருக்க தூய்மைக் காவலர்கள் இல்லம்தோறும் திட கழிவுகளை சேகரித்து, தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக மாற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 3600 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக அரசு கூடுதலாக 112 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும்.

**7. நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கான அடிப்படை கட்டமைப்பு மற்றும் கழிவு மேலாண்மை வசதிகளை அருகிலுள்ள நகர்ப்புரங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்திட ஒரு சிறப்புத் திட்டம் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள ஊராட்சிகளின் தேவைகள் இதர ஊராட்சிகளிலிருந்து வேறுபடுகிறது. நகர்ப்புரத்தை போன்றே இவ்வூராட்சிகளிலும் உட்கட்டமைப்பு வசதி, கழிவு மேலாண்மை போன்ற பல வசதிகளின் தேவை உள்ளது. இதனை கருத்தில் கொண்டு சொந்த வருவாய் நிதியின் மூலம் சிறப்பு திட்டங்களை உருவாக்கும் தகுதியுள்ள நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதியாக 69 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

**8. மலைப்பகுதிகளில் உள்ள ஊராட்சிகளின் அடிப்படை தேவைகளை மேம்படுத்துவதற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மலைப்பகுதிகளில் உள்ள ஊராட்சிகளில் குடியிருப்புகளிடையே அதிக இடைவெளி உள்ளதாலும், ஒரு ஊராட்சிப்பகுதி மலை மற்றும் பள்ளத் தாக்குகளை கொண்டு பரந்து விரிந்த நிலப்பரப்பில் அமைந்திருப்பதாலும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் சிரமங்கள் உள்ளன. இது போன்ற ஊராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த புதிய சிறப்புத் திட்டம் 30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 9. ஊரகப் பகுதிகளில் 500 புதிய அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் அங்கன்வாடி மையங்கள் முக்கிய பங்களிக்கின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நிலையான கட்டடங்களின் தேவை உள்ளது. இதற்காக பல்வேறு திட்ட நிதிகளை ஒருங்கிணைத்து இந்நிதியாண்டில் 500 புதிய அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**10. முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 2043 புதிய சத்துணவு கூடங்கள் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்திற்காக சத்துணவு கூடம் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்காக தேவைப்படும் தொடக்கப்பள்ளிகளில் 2043 புதிய சத்துணவு கூடங்கள் 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**11. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரு சிறப்பு குழு அமைத்து உள்ளூர்மயமாக்கல் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்கினை எய்த 20 கோடி ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.**

2030–க்குள் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்த ஒவ்வொரு ஊராட்சியிலும் ஐந்து நபர் கொண்ட குழு கண்டறியப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கி ஊராட்சியின் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் சமூக செயல்பாடுகள் மூலம் இலக்குகள் எய்தப்படும். இதற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. ஊரக வளர்ச்சித் துறையின் பணிகளை அனைத்து நிலையிலும் சீரிய முறையில் கண்காணிக்க தொடக்கம் முதல் முடிவு வரை கணினிமயமாக்குதல் (End to End Computerisation) 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவங்கப்படும்**

இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, முன்மொழிவு, நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப அனுமதி, ஒப்பந்தப்புள்ளி கோருதல், பணி ஆணை, பணி முன்னேற்றம், பட்டியல் அனுமதித்தல், நிதி செலவினம் மற்றும் சொத்து பதிவேடு பராமரித்தல் போன்றவற்றை எளிதில் நிர்வகித்திட ஏதுவாக அனைத்து திட்ட செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும்.

**13. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்கு ஏதுவாக மூன்று கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் காணொலி காட்சி வசதிகள் (Video Conference facilities) 388 ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்படும்.**

இன்றைய மின்னணு யுகத்தில் பயிற்சிகள், தகவல் தொடர்பு மற்றும் திட்ட கண்காணிப்பு ஆகியவற்றை செம்மையாக செய்திட காணொலி காட்சி அமைப்பு ஒரு முக்கியமான கருவியாக இருக்கிறது. அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் இவ்வசதி மூன்று கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**14. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசினை குறைக்கும் வகையில் 1500 கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் அமைக்க 500 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகள் பயன்படுத்தப்படும்.**

ஊரகப் பகுதிகளிலும் நெகிழிப்பயன்பாடு அதிகரித்து நீர் நிலைகள் மற்றும் நிலங்களிலும் மாசு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் பொருட்டு மகளிர் குழுக்களின் வாழ்வாதாரத்திற்காக நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் உருவாக்கப்பட்டு நெகிழிக்கழிவுகள் தரம்பிரித்து துகள்களாக்கப்படுகின்றன. இக்குழுவிடமிருந்து நெகிழித் துகள்களைப் பெற்று தார்ச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

2023-24-ம் ஆண்டில் "முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 1500 கி.மீ நீளமுள்ள சாலைகள் 500 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகள் பயன்படுத்தி அமைக்கப்படும்.

**15. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் திட்ட பணிகளை திறம்பட கண்காணிக்க 224 புதிய வாகனங்கள் இருபது கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும் உரிய காலத்தில் முடித்திடுவதை உறுதி செய்யவும் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாக 224 புதிய வாகனங்கள் இருபது கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.